Registered as a News Paper　　பக்கங்கள் 04　　விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　　PEOPLES DAILY　　மக்கள் தினசரி

நாதம்: 02　　திருவள்ளுவர் ஆண்டு 2022　　ஆவணி 19　　( 04 - 09 - 1991 )　　புதன்கிழமை　　ஓசை: 198

## முத்திரைகள் ஒட்டப்பட்ட விண்ணப்பங்கள் மறைவு

(யாழ்ப்பாணம்)

முத்திரை ஒட்டிக் கருமபீடத்தில் கையளிக்கப்படும் பிறப்பு, இறப்புச் சான்றிதழுக்கான விண்ணப்பப் படிவங்கள் இல யாழ். செயலகத்தில் இயங்கும் பிறப்பு, இறப்புப் பதிவாளர் காரியாலயத்தில் மாயமாக மறைந்து விடுகின்றன. தாம் முறைப்படி ஏற்றுக்கொண்ட விண்ணப்பப் படிவங்களைத் தாமே மாதக் கணக்கில் தேடிய பிறகு காணவில்லை என்று கையை விரிக்கிறார்கள். விண்ணப்பதாரரிடம் மீளவும் ஒருமுறை விண்ணப்பிக்கும்படி அங்குள்ள ஊழியர்களால் தெரிவிக்கப்படுகிறது. மேலும் விண்ணப்பதாரரின் அவசரதேவையைக் (4 ஆம் பக்கம் பார்க்க)

### மணலாற்றில் பாரிய இராணுவ நடவடிக்கை

# நித்திகைக்குளத்தில் 3 ஆம் நாளாக

# கடும் மோதல்கள் தொடர்கின்றன

## இராணுவத்திற்கு பலத்த சேதம்; 13 புலிகள் வீரமரணம்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களாக விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. இம்மோதலில் இராணுவத் தரப்பில் பலர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயம் அடைந்தனர்.

கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற மோதலில் பதின்மூன்று விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்தனர்.

மணலாறு மாவட்டத்தில் கடந்த முதலாம் திகதி காலையில் பல முகாம்களிலும் இருந்து வெளியேறிய இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் மூண்டது. முக்கிய மோதல் நித்திகைக்குளம் பகுதியில் இடம்பெற்ற வண்ணம் உள்ளது. மூன்றாவது நாளாக இம்மோதல் தொடர்ந்து நீடித்து வருகின்றது.

இம் மோதல்கள் ஆரம்பமாவதற்கு நான்கு நாட்களுக்கு முன்னரே தொடங்கிய சிறிலங்கா விமானப்படையின் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் தொடர்ந்தும் நிகழ்ந்தவண்ணமுள்ளன. குண்டுவீச்சு விமானங்களும், உலங்குவானூர்திகளும் தொடர்ச்சியாக இரவு பகல் வேறுபாடு இன்றித் தாக்குதலை மேற்கொண்ட வண்ணம் உள்ளன.

## அத்தியாவசிய பொருள் விலை நிர்ணயம்

(யாழ்ப்பாணம்)

உலர் உணவு வகைகளுக்கும் புதிய விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

புதிய விலைப்பட்டியலின் படி அரிசி கிலோ ரூபா 18-80க்கும், மா கிலோ ரூபா 12-25க்கும், சீனி கிலோ ரூபா 23-80க்கும், பருப்பு கிலோ ரூபா 50க்கும், ஹைலான்ட் பால் மா ரூபா 38க்கும் கிடைக்கும்.

கூட்டுறவுக் கடைகளிலும், (4 ஆம் பக்கம் பார்க்க)

### பிரேமதாசாவிற்கு எதிரான கோரிக்கை

## நிராகரிக்க 116 எம்.பிகள் சபாநாயகரிடம் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்க பாராளுமன்ற குழுவைச் சேர்ந்த நூற்றுப் பதினாறு உறுப்பினர்கள் நேற்று மாலை பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் சபாநாயகர் எம். எச் எம். மொகமட்டைச் சந்தித்தனர். ஜனாதிபதி பிரேமதாசாவை பதவியிலிருந்து அகற்ற எடுத்த முயற்சியை நிராகரிக்குமாறு இந்த உறுப்பினர்கள் சபாநாயகரைக் கேட்டுள்ளனர். பிரதமர் டி.பி. விஜயதுங்கா தலைமையில், ரணில் விக்கிரமசிங்க, ஏ சி எஸ் ஹமீது (4 ஆம் பக்கம் பார்க்க)

### பாராளு. ஆட்சி முறைக்கு மாற

## அபிப்பிராயவாக்கெடுப்பு கோர ஜனாதிபதி தயாராம்

(கொழும்பு)

பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு மாற வேண்டுமா என்பது பற்றி மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்த சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசா முன்வந்துள்ளார்.

இப்போது இருக்கும் ஜனாதிபதி ஆட்சிமுறையை நீடிப்பதா அல்லது பிரதம மந்திரி தலைமையிலான பாராளுமன்ற ஆட்சி முறைக்கு மாறுவதா என்பது குறித்து மக்களின் விருப்பத்தைத் தெரிந்து கொள்ளும் வகையில் அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றை நடாத்துவதற்கு பிரேமதாசா முன்வந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் ஜனாதிபதி பேசுகையில், பாராளுமன்ற உறுப்பினர்கள் விரும்பும் பட்சத்தில் அத்தகைய அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றை எதிர்க்கவில்லை என்றார்

அதேவேளை மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புப் பற்றி சிறிலங்கா ஜனாதிபதி கதியையோ, காலவரையறை எதையும் குறிப்பிட்டுப் பேசவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிருப்தியாளர் வரவேற்பு

(கொழும்பு)

பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு மாற வேண்டுமா என்பது குறித்து அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்த சிறிலங்கா ஜனாதிபதி முன்வந்துள்ளமையை லலித் அத்துலத்முதலியும், காமினி திஸநாயக்காவும் வரவேற்றுள்ளனர்.

இவ் அபிப்பிராய வாக்கெடுப்பு தற்பொழுது தோன்றியுள்ள அரசியல் நெருக்கடியை தீர்த்து வைக்க உதவுமென காமினிதிஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மகாநாட்டிற்கு சென்றவர்கள் தமிழகப் பொலிசாரால் கைது

(சென்னை)

வேலூரில் நடத்தப்படவிருந்த தமிழ் மகாநாடொன்று ... வாளர்கள் என்றும் தமிழக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதனாலேயே மகாநாடு நடைபெறவிருந்த மண்டபம் (4 ஆம் பக்கம் பார்க்க)

## தற்பொழுது உள்ளது வர்க்கபேதமே; கட்சி வேறுபாடு அல்ல - பிரேமதாசா

கொழும்பு

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையின் கீழ் மாத்திரமே நாட்டின் நெருக்கடி மிக்க பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற அரசியல் கட்சி பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய பிரேமதாசா இவ்வாறு தெரிவித்தார்.

தமக்கு எதிரான குற்றஞ் (4 ஆம் பக்கம் பார்க்க)

தனா.

கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற மோதலில் பதின்மூன்று விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்தனர்.

மணலாறு மாவட்டத்தில் கடந்த முதலாம் திகதி காலையில் பல முகாம்களிலும் இருந்து வெளியேறிய இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் மூண்டது. முக்கிய மோதல் நித்திகைக்குளம் பகுதியில், இடம்பெற்ற வண்ணம் உள்ளது. மூன்றாவது நாளாக இம்மோதல் தொடர்ந்து நீடித்து வருகின்றது.

இம் மோதல்கள் ஆரம்பமாவதற்கு நான்கு நாட்களுக்கு முன்னரே தொடங்கிய சிறிலங்கா விமானப்படையின் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் தொடர்ந்தும் நிகழ்ந்தவண்ணமுள்ளன. குண்டுவீச்சு விமானங்களும், உலங்குவானூர்திகளும் தொடர்ச்சியாக இரவு பகல் வேறுபாடு இன்றித்தாக்குதலை மேற்கொண்ட வண்ணம் உள்ளன.

# தமிழ் மகாநாட்டிற்கு சென்றவர்கள் தமிழகப் பொலிசாரால் கைது

(சென்னை)

வேலூரில் நடத்தப்படவிருந்த தமிழ் மகாநாடொன்று தமிழக பொலிசாரால் தடை செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழத்திற்கு ஆதரவாகவே இந்த மகாநாடு நடத்தப்படவிருந்ததாகவும், இதில் கலந்துகொள்ள இருந்தவர்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்றும் தமிழக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதனாலேயே மகாநாடு நடைபெறவிருந்த மண்டபம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டனின் நிலை குறித்து சிறிலங்கா கலக்கம்

(கொழும்பு)

டேவிற் கிளாட்ஸ்ரோன் வேண்டத்தகாதவராக கருதி வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து சிறிலங்காவுக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் இதுவரை நியமிக்கப்படவில்லை.

ஜூலை மாதம் நடுப்பகுதியில் சிறிலங்காவுக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகரை அனுப்புவதாக பிரித்தானியா அறிவித்திருந்தது. பிரித்தானியா இதுவரை ஸ்தானிகர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாகரன் மீது வழக்குத் தாக்கல்

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணை நடத்திவரும் விசேட புலனாய்வுக் குழுவினர் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே பிரபாகரன் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யவுள்ளது என்று 'தினத்தந்தி' தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் இருந்து வரும் நாளிதழான 'தினத்தந்தி' இக்கொலை தொடர்பாக விடுதலைப் புலிகளைச் சேர்ந்த எட்டு முக்கிய உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும்,

ராஜீவை கொலை செய்யும் படி பிரபாகரனே நேரடியாக உத்தரவிட்டுள்ளார் என்று விசாரணையில் இருந்து தெரி

(4ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் தந்தை திருச்சியில் கைது

(திருச்சி)

விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் தந்தை திருச்சியில் பொலிசாரால் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது

ராஜீவ் காந்தி கொலை சம்பந்தமாக இவரை விசாரித்து வருவதாகவும் திருச்சி பொலிசார் தெரிவித்துள்ளனர்.

விசாரணையின் போது பிரபாகரனின் தந்தை 'தனக்கும் பிரபாகரனுக்கும் எந்த வித தொடர்பும் இல்லை எனவும், பிரபாகரன் தன்னைக் கவனிப்பதில்லை' என்றும் தெரிவித்ததாக திருச்சி காவல் துறை அதிகாரி ஜெகநாதன் தெரிவித்துள்ளார்.

வாக்கெடுப்பு நடாத்த சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசா முன்வந்துள்ளார்.

இப்போது இருக்கும் ஜனாதிபதி ஆட்சிமுறையை நீடிப்பதா அல்லது பிரதம மந்திரி தலைமையிலான பாராளுமன்ற ஆட்சி முறைக்கு மாறு நடாத்துவதற்கு பிரேமதாசா முன்வந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் ஜனாதிபதி பேசுகையில், பாராளுமன்ற

அதேவேளை மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புப் பற்றி சிறிலங்கா ஜனாதிபதி கதியையோ, காலவரையறை எதையும் குறிப்பிட்டுப் பேசவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தற்பொழுது உள்ளது வர்க்கபேதமே; கட்சி வேறுபாடு அல்ல - பிரேமதாசா

கொழும்பு

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையின் கீழ் மாத்திரமே நாட்டின் நெருக்கடி மிக்க பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் ஜனாதிபதி செயலகத்தில்நடைபெற்ற அரசியல் கட்சி பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய பிரேமதாசா இவ்வாறு தெரிவித்தார்.

தமக்கு எதிரான குற்றஞ்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அதிருப்தியாளர் வரவேற்பு

(கொழும்பு)

பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு மாறவேண்டுமா என்பது குறித்து அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்த சிறிலங்கா ஜனாதிபதி முன்வந்துள்ளமையை லலித் அத்துலத்முதலியும், காமினி திஸநாயக்காவும் வரவேற்றுள்ளனர்.

இவ் அபிப்பிராய வாக்கெடுப்பு தற்பொழுது தோன்றியுள்ள அரசியல் நெருக்கடியை தீர்த்து வைக்க உதவுமென காமினிதிஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு பிரேமா ஆயுதம் வழங்கினார்

(கொழும்பு)

இந்திய அமைதிப் படையினருக்கு எதிராகப் போராடுவதற்கு விடுதலைப் புலிகளுக்கு இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா ஆயுத உதவி அளித்ததாகவும், இது அமைச்சரவைக்கு தெரியாமல் அவர் தன்னிச்சையாக எடுத்த முடிவு என்றும் லலித் அத்துலத் முதலி கூறியுள்ளார்.

பிரேமதாசா அறிவித்த கருத்துக் கணிப்பு பற்றிய யோசனையை முன்னாள் அமைச்சர் காமினி திசநாயக்கா, வரவேற்றுள்ளார். ஆனாலும் கருத்துக் கணிப்பு உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளார்.

## இன்று தீர்ப்புக் கூறுவதாக சபாநாயகர் அறிவிப்பு

கொழும்பு)

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு ஆதரவாக நேற்று முன்தினம் 116 ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் நிறைவேற்றிய தீர்மானத்தை சபாநாயகர் எம். எச். முகமெட் ஏற்றுக்கொண்டார்.

இதேவேளை சட்டமா அதிபரைக் கலந்தாலோசித்த பிறகு ஜனாதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டு மனு மீதான தனது தீர்ப்பை இன்று வழங்குவதாக சபாநாயகர் தெரிவித்தார்.

## தமிழக வரவு-செலவு கூட்டத்தொடர்

(சென்னை)

தமிழக சட்டப் பேரவையில் வரவுசெலவுக் கூட்டத் தொடர் இன்று தொடங்குகிறது.

ஒரு மாத காலம் இந்தக் கூட்டம் தொடர்ந்து நடைபெறும் என எதிர்பார்க்கப் படுகிறது.

# புலிகளுக்கு எதிரான நடவடிக்கை தமிழகத்தில் தொடரும் - தேவாரம்

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தமிழகத்திலுள்ள அனைத்துத் தொடர்புகளையும் கண்டு பிடித்து அவற்றை களைவதற்கான நடவடிக்கையில் தமிழக காவல் துறையினர் ஈடுபட்டுள்ளனர் என்று தமிழகக் காவல்துறை சட்டம் ஒழுங்கு பிரிவு இன்ஸ்பெக்டர் ஜெனரல் தேவாரம் தெரிவித்துள்ளார்.

கோவையில் நேற்று பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசிய தேவாரம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் மேலும் தொடர்ந்து நடைபெறும் என்றும் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முக்கிய குற்றவாளிகளான சுபாவும், சிவராசனும் தற்கொலை செய்து கொண்டாலும், தமிழக காவல் துறையின் பணிகள் முடிந்துவிடவில்லை என்றும்;

தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு தொடர்ந்தும் புகலிடம் அளித்து வருபவர்களை கைது செய்ய காவல்துறை கருத்தாக இருப்பதாகவும் தேவாரம் தெரிவித்தார்.

## கூறுவிலை கோரல்

### மூடிய கொப்பறையில் பனம் சீனி உற்பத்தி. 1000 கிலோ, 500 கிலோ சீனி உற்பத்திக்கான இயந்திர பொறி அமைப்பதற்கான கூறுவிலை கோரல்.

மேற்படி தொடர்ச்சியாக இயங்கும் ஓர் பொறியை அமைப்பு செய்து தருவதற்கு இயந்திர உற்பத்திகள் செய்யும் கொம்பனிகளிடம் இருந்து கூறுவிலைகளைக் கோருகின்றோம் இவ்வியந்திரத்தின் மாதிரிவடிவமைப்பின் படப்பிரதியை, யாழ் மாவட்ட கூ. அ. உ. ஆணையாளர் (ப. பொ) அவர்களை அணுகிப் பார்வையிடலாம்; மேலதிக விபரமும் பெறலாம். எமது பிரதேச வளப் பயன் பாட்டைக் கருத்தில் கொண்டு இத் தொழில்சார் நிறுவனங்களிடம் இருந்து இதற்கான கூறுவிலையை எதிர்பார்க்கின்றேன்.

இ. சிவநேசன்
பொதுமுகாமையாளர்
வடமாகாண தெ. ப. பொ கூ.ச.
சமாசம்.

(B/3054)

## மத்திய அரசாங்கத்துடன் முரண்பாடு ஏதும் இல்லை

### — கல்யாண்சிங்

(லக்னோ)

ராமஜென்மபூமி பாபர் மசூதி பிரச்சினை தொடர்பாக அயோத்தியில் சர்ச்சைக்குரிய நிலத்தை கையகப் படுத்தும் சட்டம் ஒன்றை கொண்டு வருவதற்கான திட்டம் ஒன்றும் இப்போதைக்கு ஏதும் இல்லை என்று உத்தரப் பிரதேச முதலமைச்சர் கல்யாண்சிங் தெரிவித்துள்ளார்.

லக்னோவில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய கல்யாண்சிங் இப்பிரச்சினைக்கு சுமுகமான முறையில் தீர்வுகாண முஸ்லிம் சமுதாயத்தின் அறிஞர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துவதாகவும் இந்தப் பிரச்சினை குறித்து மத்திய அரசாங்கத்துடன் எந்தவித முரண்பாடும் இருக்காது என்றும் கல்யாண்சிங் தெரிவித்துள்ளார்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### வீரவேங்கை வெற்றிச்செல்வன்

(ஸ்ரனிஸ்லோஸ் நிகிதராஜ்)

வீரஜனனம் 30-06-1975 வீரமரணம் 05 08-1991

எம் இன
துன்பங்கள் துடைக்க
துடித்தெழுந்த
வெற்றிச் செல்வா — நீ
வெற்றி பெறுமுன்
வேகமாக எங்கு சென்றாய்?

வெற்றிச் செல்வா — நீ
எங்களுடன் என்றென்றும்
இறுதிவரை வாழ்ந்திருப்பாய்!
உன் நினைவை
ஒரு நாளும் நாம் மறவோம்
உன் கனவை வெற்றிச் செல்வா
ஒரு நாளில் வெற்றி கொள்வோம்!

எம் துயர் குறைக்க ஆறுதல் கூறிய அனைத்து மக்களுக்கும் அன்புடன் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

பெற்றோர், சகோதரர், சகோதரி,
நண்பர்கள்.

(B/3042)

## பங்குச் சந்தையில் வீழ்ச்சி

(கொழும்பு)

அரசியல் நெருக்கடியின்விளைவாகக் கொழும்பில் பங்குச்சந்தையிலும் நேற்று முன்தினம் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. பிரச்சினையின் ஆரம்பத்தில் 17·3 மில்லியன் பங்குகளைக் கையாண்ட பங்குச் சந்தை நேற்றுவரை 2·3 மில்லியன் பங்குகளையே கையாண்டது.

## இசைநிகழ்ச்சிகள்

(நல்லூர்)

நல்லூர் கந்தன் ஆலயத் தேர்த்திருவிழா எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றையதினம் காலை 8மணி முதல் மாலை 5மணி வரை நல்லை ஆதீன கலா மண்டபத்தில் பண்ணிசைக் கச்சேரி, இசைக்கச்சேரி, இணை இசைக்கச்சேரி, தாவடியூர் எஸ் வடிவேல் அவர்களின் கதாப்பிரசங்கம். மற்றும் பக்தி இசை ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

## 'கிப்ஸ்' வெற்றி பெற்றது

(யாழ். விளையாட்டு நிருபர்)

கரும்புலி லெப்டினன் கேணல் போர்க் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான 11 பேர் கொண்ட 20 ஓவர் போட்டியில் 'கிப்ஸ்' விளையாட்டுக் கழகம் சாஜா விளையாட்டுக் கழகத்தை 2விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

இப்போட்டி நல்லூர் செங்குந்தா இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

போட்டி ஆரம்ப நேரத்தில் இருந்து இறுதிவரை விறுவிறுப்பாக அமைந்திருந்தது.

பெருந்திரளான மக்களும் கிரிக்கட் ரசிகர்களும் இப் போட்டியைப் பார்த்து ரசித்தனர். (42)

## 45-ம்நாள் நினைவஞ்சலி



வீர ஜனனம் 21.09.1973

வீர மரணம் 21.07.1991

வெற்றிலைக்கேணியில் வீரமரணமடைந்த

### வீரவேங்கை சிவானி

(சண்முகநாதன் ரோகினி)

காலத்தின் நிழலோ தழல் பட்டெரியுது ஐயையோ!
சுகவாழ்வு தேடி வசந்தத்தில் பறந்தனையோ
ஆனையிறவில் ஆணையிட சென்ற அணங்கே
அம்மா உன்றன் கரங்களே விடுதலையில் துப்பாக்கியின் வரங்கள்
வரலாறுபடைத்திட்டாய் வான்மதியோடு கலந்திட்டாய்
ரோகினியோடு சேர்ந்திட்டாய் விண்ணுலகு சென்றிட்டாய்

## 51ஆம் நாள் நினைவு

பார் 09 — 08 — 1972



போர் 14 — 07 — 1991

### இராசரத்தினம் ஜீவரத்தினம்

(நாவற்காடு அச்சுவேலி)

தாயிடம் இருந்து தமிழிடம் சேர்ந்தீர்
ஓயாத பணியில் ஒருவழி நின்றீர்
மாறாத தியாகம் மார்பிலே ஏற்றீர்
தீராத சோகம் இளமையில் தீர்த்தீர்
கோட்டை மீதிலும் கொக்காவில் மண்ணிலும்
மாங்குள முகாமிலும் ஒருகொடி பறந்தது
ஆனை இறவிலே ஆற்றிய பெரும்போர்
அகிலம் யாவிலும் கொடிகளாய்ப் பறக்குது
மரபு காத்திடும் மறப்புலி வீரரே
மனதிலே கொண்டது மண்ணிலே படியும்
ஈழம் மலர்வது உறுதியாய் முடியும்!

நாவற்காடு,
அச்சுவேலி.
(B-3051)

- பெற்றோர், சகோதரர்,
உறவினர், நண்பர்கள்.

## நினைவு கூருகின்றோம்...





வீர ஜனனம்
21.09.1973

வீர மரணம்
21.07.1991

வெற்றிலைக்கேணியில் வீரமரணமடைந்த

## வீரவேங்கை சிவானி

**(சண்முகநாதன் ரோகினி)**

காலத்தின் நிழலோ தழல் பட்டெரியுது ஐயையோ!
சுகவாப்வு தேடி வசந்தத்தில் பறந்தனையோ
ஆனையிறவில் ஆணையிட சென்ற அணங்கே
அம்மா உன்றன் கரங்களே விடுதலையில் துப்பாக்கியின் வரங்கள்
வரலாறுபடைத்திட்டாய் வான்மதியோடு கலந்திட்டாய்
ரோகினியோடு சேர்ந்திட்டாய் விண்ணுலகுசென்றிட்டாய்
உன் இரத்தங்கள் தமிழீழத்தில் குங்குமமாக மலரட்டும்!

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

- உறவினர், நண்பர்கள்

(R/1699)

## 45ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



## கப்டன் அரசன்

**(சோமசேகரம் யோகேந்திரன்)**

| வீரஉதயம் | வீரஅஸ்தமனம் |
|---|---|
| 27 - 07 - 1971 | 22 - 07 - 1991 |

22 07-1991 அன்று ஆனையிறவு மீட்புப் போரின் போது சட்டைக்காட்டில் வீரமரணமடைந்த எமது வீரத்தமிழ்ப் புதல்வனுக்கு நாம் செலுத்தும் கண்ணீர்க் காணிக்கை.

நடுத்தெரு ஒழுங்கை,
அரியாலை.

— குடும்பத்தினர்.

(B/3056)

08 — 1972    07 — 1991

## இராசரத்தினம் ஜீவரத்தினம்

(நாவற்காடு அச்சுவேலி)

தாயிடம் இருந்து தமிழிடம் சேர்ந்தீர்
ஓயாத பணியில் ஒருவழி நின்றீர்
மாறாத தியாகம் மார்பிலே ஏற்றீர்
தீராத சோகம் இளமையில் தீர்த்தீர்
கோட்டை மீதிலும் கொக்காவில் மண்ணிலும்
மாங்குள முகாமிலும் ஒருகொடி பறந்தது
ஆனை இறவிலே ஆற்றிய பெரும்போர்
அகிலம் யாவிலும் கொடிகளாய்ப் பறக்குது
மரபு காத்திடும் மறப்புலி வீரரே
மனதிலே கொண்டது மண்ணிலே படியும்
ஈழம் மலர்வது உறுதியாய் முடியும்!

நாவற்காடு,
அச்சுவேலி.

- பெற்றோர், சகோதரர், உறவினர், நண்பர்கள்.

(B-3051)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

| வீர ஜனனம் | | வீர மரணம் |
|---|---|---|
| 13 — 06 — 1972 | | 22 — 07 — 1991 |



## 2ஆம்லெப். ரேவா

**(அற்புதநாதன் குகதாஸ்)**

எமதருமைச் சாந்தா!
கண்ணினால் சிரிக்கும் - உன்
கள்ளநகை கண்டுமா
சுயவர் வடிவில் காலன்
உனைக் கவர்ந்து விட்டான்?
கண்களிரண்டும் உனைத் தெய்வமென ஏற்றி
காத்திருக்கின்றோம் உன் வரவிற்காக
இங்கு
அன்பு, நட்பு, பாசம் எதுவுமே
நிரந்தரமானதில்லையா?
உன் கடைசி நாட்கள் எம்முடன்
கழிந்ததற்கு நாம் கொடுத்து வைத்ததற்கு
இறைவனுக்கு நன்றிகள் - ஆனாலும்
நீ இறந்தாலும் இறக்காது
என்றும் உன் நினைவுகள்.

குப்பிளான்,
ஏழாலை.
B./3057)

உன்பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, சோதரசோதரிகள்
நண்பர்கள், உறவினர்கள்.

வெற்றி பெறுமுன்
வேகமாக எங்கு சென்றாய்?

வெற்றிச் செல்வா — நீ
எங்களுடன் என்றென்றும்
இறுதிவரை வாழ்ந்திருப்பாய்!
உன் நினைவை
ஒரு நாளும் நாம் மறவோம்
உன் கனவை வெற்றிச் செல்வா
ஒரு நாளில் வெற்றி கொள்வோம்!

எம் துயர் குறைக்க ஆறுதல் கூறிய அனைத்து மக்களுக்கும் அன்புடன் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

பெற்றோர், சகோதரர், சகோதரி,
நண்பர்கள்.

(B/3042)

கரும்புலி லெப்டினன் கேணல் போர்க் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான 11 பேர் கொண்ட 20 ஓவர் போட்டியில் 'கிப்ஸ்' விளையாட்டுக் கழகம் சாஜா விளையாட்டுக் கழகத்தை 2விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

இப்போட்டி நல்லூர் செங்குந்தா இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

போட்டி ஆரம்ப நேரத்தில் இருந்து இறுதிவரை விறுவிறுப்பாக அமைந்திருந்தது.

பெருந்திரளான மக்களும் கிரிக்கட் ரசிகர்களும் இப்போட்டியைப் பார்த்து ரசித்தனர். (42)

## நினைவு கூருகின்றோம்...

**1991 - 09 - 04**   **2ஆம் லெப். கண்ணன்**



1985 ஆம் ஆண்டு தபசிமலையில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 17 தமிழர்கள்

1986 ஆம் ஆண்டு மன்னார் கோட்டை சிறிலங்கா படைமுகாம் காவல் அரண்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரமரணமெய்திய

**2ஆம் லெப் காளி** (சந்தியாப்பிள்ளை ஜெரால்ட், ஜோண்சன் - கங்காணித்தீவு)

1987 ஆம் ஆண்டு மன்னார் பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் தேசவிரோதிகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய

**2ஆம் லெப். கயிலை** (கோபாலசிங்கம் வன்னியசிங்கம் - வவுனியா)

குருமண்காட்டுச்சந்தியில் தேசவிரோதிகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய

**கப்டன் தனம்** (நாகமணி வசந்தராசன் - தண்ணீரூற்று)

**2ஆம் லெப். கண்ணன்** (சே. சிறிசேதுகாவலன் - வவுனியா)

1988 ஆம் ஆண்டு தேசவிரோதிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரமரணமெய்திய பலாலி பிரதேசப் பொறுப்பாளர்

**பேரின்பம்** (குருசுமுத்து மைக்கல்பிள்ளை - வசாவிளான்)

திருக்கோணமலையில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன 3 தமிழ் இளைஞர்கள்

1989 ஆம் ஆண்டு சுண்டுக்குளியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரமரணமெய்திய

**முரளி** (இராசநாயகம் பிரேமதாஸ் - இணுவில் தெற்கு)

நெடுங்கேணியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட அதேஇடத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்

1990 ஆம் ஆண்டு சுகயீனம் காரணமாக எம்மைப்பிரிந்த

**முகிலன்** (சொறிவில் - 12)

வவுனியா / பாவற்குளம், 1ஆம் யூனிற் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய

**சஜீப் / சிறி** (கணபதிப்பிள்ளை சிறிறஞ்சித் - பம்பைமடு, வவுனியா)

பரந்தனில் தனது கடையைத் திறக்கும்போது சிறிலங்காப் படையினர் வைத்து விட்டுச் சென்ற கண்ணிவெடி வெடித்ததில் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

(B/3053) - **விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி**

### சிந்தனைக்கு

உனக்கு என்ன அவக்கேடு நேரிட்டாலும்
அது உன் கைகள் ஆற்றியுள்ள
ஒரு செயலின் விளைவுதான்

டி எஸ். ஈலியட்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 04-09-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 5208
த. பெ. எண் 65

## குற்றச் சாட்டைப் புறக்கணிக்க முடியாது

அந்நிய சக்திகளின் உதவியுடன்தான் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மீது குற்ற விசாரணைத் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளதாக பெரும்பாலும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகைகள் குற்றம் சாட்டியுள்ளன. இந்தக் குற்றச்சாட்டில் அந்நிய சக்திகளின் வரிசையில் இந்தியா, பிரிட்டன் உட்படமேற்கு நாடுகள், கொழும்பில் பெரும் சூதாட்ட விடுதிகளை நடத்தி வந்த வெளிநாட்டுப் பண முதலைகள் என்பவர்கள் வரிசைப் படுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை, இந்தக் குற்றச்சாட்டை அதிருப்தியாளருக்குத் தலைமை தாங்கும் லலித் அத்துலத்முதலியும் காமினி திஸ்ஸநாயக்காவும் திட்டவட்டமாக மறுத்துள்ளனர். லலித் அத்துலத்முதலியும், காமினியும் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள போதும், பத்திரிகைகள் வேண்டுமென்றே குற்றம் சாட்டியிருப்பினும் பிரேமதாசா அரசாங்கத்தினருக்கும் அதிருப்தியாளருக்கும் மேற்குலகம், இந்தியா தொடர்பாக பெரும் முரண்பாடு உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. இதனால், அந்நிய சக்திகளின் தலையீடுகள், குறைந்தது மறைமுக அங்கீகாரம் கூட இல்லை என்று எவரும் அடித்துக் கூறிவிட முடியாது.

1987ஆம் ஆண்டு இந்திய-சிறிலங்கா சமாதான ஒப்பந்தத்தின் போது சம்மை ஓரளவு தெளிவாக வெளிக்காட்டிக் கொண்டவர் காமினி திஸ்ஸநாயக்கா. அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கு அடுத்தபடியாக ஒப்பந்தத்திற்கு தீவிர ஆதரவு வழங்கியவர் அவர். அதே போன்று கடந்த காலம் ஐக்கிய தேசியக் கட்சி கடைப்பிடித்து வந்த மேற்குலகம் சார்ந்த வெளியுறவுக் கொள்கையிலும் பற்றுக் கொண்டவர்.

அதேபோன்றே முன்னாள் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் இலங்கையில் ஏற்பட்ட தேசிய இனப் போராட்டத்திற்கு மேற்குலகிடம் இருந்தே பெரும் உதவிகளையும் ஆலோசனைகளையும் பெற்றவர். இவரது காலத்தில் பிரிட்டன் சிறிலங்கா உறவு மிக நெருக்கமாகவே இருந்தது. இவர்களது நெருக்கம் காரணமாகவே பிரித்தானிய கூலிப்படையான எஸ். ஏ. எஸ்ஸும், அத்தோடு மொஸாட்டும் சிறிலங்காவிற்குள் புக வாய்ப்புக்கள் ஏற்பட்டன.

மறுவளமாக சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா 1987ஆம் ஆண்டு இந்திய - சிறிலங்கா சமாதான ஒப்பந்தத்தை வன்மையாக எதிர்த்தவர். ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்ச்சியைப் புறக்கணிப்புச் செய்தவர். இதன் மூலம் இந்தியாவிற்கு வேண்டத்தகாதவர் பட்டியலில் உள்ளவர்.

## நிலைமைகள் மோசமடையும் முன் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும்

### --கிரம்பிளினிடம் மேற்கு கோரிக்கை

(மொஸ்கோ)

நிலைமைகள் மேலும் மோசமடையும் முன்னர் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கோரும் கோரிக்கைகள் அடங்கிய செய்தி ஒன்றை மேற்குலக நாடுகளின் சார்பில் பிரிட்டிஷ் பிரதமமந்திரி ஜோன் மேயர் கிரம்பிளினில் கையளித்தார்.

கடந்த மாதம் நிகழ்ந்த திடீர் சதிப்புரட்சியின் பின்னர் முதல் முறையாக சோவியத் யூனியனுக்கு சென்ற வெளிநாட்டுத் தலைவரான ஜோன் மேயர் நேற்றுமுன்தினம்சோவியத்யூனியன் ஜனாதிபதி மிகையில் கொர்பசேவைச் சந்தித்து உரையாடினார்.

இச் சந்தர்ப்பத்தின் பின்னர் ஜோன் மேயர் பத்திரிகையாளர்களை சந்தித்தார். சோவியத்தில் உள்ள குடியரசுகள் தமக்கிடையே ஒற்றுமையைப் பேணிக் கொள்வது மட்டுமல்லாது மத்திய அரசுடனும் நெருக்கமான உறவுகளை அதிகரிப்பது அவசியம் என்பதை உணர்ந்திருப்பது தமக்கு உற்சாகம் அளிக்கிறது என்றும் ஜோன் மேயர் கூறியுள்ளார்.

மேலும் அந்தச் சந்திப்பில் அவர் பத்திரிகையாளர்களிடையே பேசுகையில் சோவியத்தின் அணு ஆயுதங்கள் சம்பந்தப்பட்ட விடயம் கண்டிப்பாக மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழேயே இருக்க வேண்டும் என்பதை கொர்பசேவிடமும் யெல்சினிடமும் நேராக கதைத்து உறுதி மொழி பெற்றுக் கொண்டுள்ளேன் என்றும் கூறியுள்ளார்.

சோவியத் யூனியனில் ஸ்திர நிலைமை பேணப்பட வேண்டியதன் அவசியத்தை ஜோன் மேயர் வெளிப்படுத்தியதோடு அல்லாமல் சீர்திருத்தத்தினை தொடர்ந்து படிப்படியாக இந்த ஸ்திர நிலையைக் கொண்டே மேற்கத்தேய நாடுகளில் இருப்பது போன்ற சந்தைப் பொருளாதார நிலையை ஏற்படுத்தலாம் என்பதை கொர்பசேவும் யெல்சினும் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வாட்டிலிருந்த நோயாளர் வீடு செல்லப்பணிப்பு

(மானிப்பாய்)

தெல்லிப்பளை அரசினர் மருத்துவ மனையின் முக்கிய பல பிரிவுகள் கடந்த 1 ஆம் திகதியுடன் மூடப்பட்டதைத் தொடர்ந்து வாட்டுகளில் அனுமதிக்கப்பட்டிருந்த பல நோயாளர்கள் அவர்களது வீடுகளுக்குச் செல்லுவதற்கு பணிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு சில அவசர நோயாளர்கள் மட்டும் சங்கானை அரசினர் மருத்துவ மனைக்கும் யாழ். போதனா வைத்திய சாலைக்கும் மாற்றப்பட வுள்ளனர்.

மேற்படி வைத்தியசாலை மூடப்படும் என்ற செய்தி ஈழநாதத்தில் வெளிவந்தது தெரிந்ததே.

தற்போது மூடப்பட்ட பகுதிகளை வேறு இடத்தில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையில் மேற்படி வைத்தியசாலை வட்டாரங்கள் ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது. நோயாளர் நலன்கருதி வேறு இடத்தில் விரைவில் இயங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது மானிப்பாயில் தொடர்ந்து குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு, மனநோயாளர் பிரிவு பல்சிகிச்சைப்பிரிவு ஆகியன இயங்குகின்றன. (ச)

## மொஸ்கோவிலிருந்துமேயர் சீனா சென்றுள்ளார்

(பீக்கிங்)

மத்திய கிழக்கு உட்பட மோதல்களில் இறங்கி உள்ள கீழைத்தேய நாடுகளுக்கு சீனா ஆயுதங்களை விற்பனை செய்வது குறித்தும் மற்றும் பல விடயங்கள் குறித்தும் பேச்சுவார்த்தை செய்வதற்கு பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேயர் பீக்கிங்கிற்குச் சென்றுள்ளார்.

மொஸ்கோவிற்கு சென்றுவிட்டு அங்கிருந்து விமானம் ஊடாக நேற்று முன்தினம் பீக்கிங்கிற்கு வந்திறங்கிய ஜோன் மேயர் சீனாவின் பிரதம மந்திரி லீ பெங் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஜியாவ் பிஎமிங் ஆகியோருடனும் சீன ஜனாதிபதி யாங்சகுங் ஆகிய அவனவருடனும் கலந்துரையாடுவார் என்று ஜோன் மேயருடன் சீனாவுக்குச்சென்ற அதிகாரிகள் பத்திரிகையாளரிடம் கூறியுள்ளனர்.

இதுதவிர பிரதமர் மேயர் தாம் தமது கருத்துவெளியீட்டில் சர்வதேச நாடுகளிலிருந்து சீனா தனித்து இருக்கும் நிலைமையை முற்றுப் புள்ளி வைத்து அனைத்து நாடுகளுடனும் வர்த்தக பொருளாதார தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளும் காலம் வந்துவிட்டது என்று கூறினார்.

அத்துடன் கடினப் போக்குடைய கம்யூனிஸ்ட் தலைவர்களுடனும் மனித உரிமைகள் குறித்து பேசப் போவதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை ஜோன் மேயரின் அதிகாரிகள் சிலர் சோவியத் யூனியனில் ஏற்பட்டுள்ள இன்றைய நிலைமை சீனாவில் உள்விவகாரத்தில் அதிக கட்டுப்பாடுகளை விதிப்பதற்கான ஏது நிலைகள் இருப்பதாகவும் கூறி உள்ளனர்.

## அணு ஆயுத ஆற்றல் பாகிஸ்தானிடம் உள்ளது

### -பெனாசிர் பூட்டோ

(இஸ்லாமாபாத்)

அணு ஆயுதங்களைத் தயா

## ஆசிரியர் ஆலோசகர்கள் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன

(நல்லூர்)

யாழ் மாவட்டத்திலுள்ள ஆசிரியர் ஆலோசகர் வெற்றிடங்கள் யாழ் கல்வித்திணைக்களத்தினாலும், கோட்டக் கல்வி அலுவலகங்களினாலும் நிரப்பப்பட்டுள்ளன

மேலும் இவர்கள் மூலம் சேவைக்காலப்பயிற்சி வகுப்புகளும் நடாத்தப்படுகின்றன. ஆனால் இவர்களுக்கான நிரந்தர நியமனக்கடிதங்கள் இதுவரை வட-கிழக்கு மாகாண சபையினால் வழங்கப்படவில்லை.

இவர்களுக்கு நிரந்தர நியமனக்கடிதத்தை வழங்கி, பயிற்சி வகுப்புகளை நன்கு நடைபெற உதவுமாறு யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர் வட-கிழக்கு மாகாணசபை கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்

ஆசிரியர் ஆலோசகர்களுக்கு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளரினால் தற்காலிக நியமனக் கடிதங்களே வழங்கப்பட்டுள்ளன.

## புலிகளே கொன்றதாக

## நிசா அஞ்சலிக் கூட்டம்

(பருத்தித்துறை)

ஆனையிறவுப் போரிலே வீரமரணமடைந்த நிசா (செல்வி சின்னத்தம்பி விஜயா, சிங்கைநகர் புலோலி)வின் 45 ஆவது நாள் அஞ்சலிக்கூட்டம் சிங்கைநகர், உதயசூரியன் முன்னேற்ற மன்ற சனசமூக நிலையத் தலைவர் திரு. வி. ஜி. தங்கவேல் தலைமையில் சிங்கைநகர் மைதானத்தில் நடைபெற்றது.

இவ்வஞ்சலிக் கூட்டத்திலே தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவு வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா, கரவெட்டி பொறுப்பாளர் திரு. பாஸ்கரன், விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவு உறுப்பினர் செல்வி சந்திரிகா ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர்.

வீரப்புலி நிசா, வீரப்புலி நித்தியகலா ஆகியோர் பற்றிய வில்லிசைகளும் "மண்ணின் தாகம்" நாடகமும் இடம்பெற்றன. (25)

## துப்பாக்கிச் சூடும் ஷெல்தாக்கும்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் கட்டுவன், குப்பிளான், வீமன்காமம், தெல்லிப்பளை ஆகிய பகுதிகளை நோக்கி பரவலான ஷெல்தாக்குதலும் 50கலிபர்த் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணியளவில் காரைநகர் இராணுவ முகாமில் இருந்து பரவலான எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் சேதமெதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகைகள் குற்றம் சாட்டியுள்ளன. இந்தக் குற்றச்சாட்டில் அந்நிய சக்திகளின் வரிசையில் இந்தியா, பிரிட்டன் உட்படமேற்கு நாடுகள், கொழும்பில் பெரும் சுநாட்ட விடுதிகளை நடத்தி வந்த வெளிநாட்டுப் பண முதலைகள் என்பவர்கள் வரிசைப் படுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை, இந்தக் குற்றச்சாட்டை அதிருப்தியாளருக்குத் தலைமை தாங்கும் லலித் அத்துலத்முதலியும் காமினி திஸ்ஸநாயக்காவும் திட்டவட்டமாக மறுத்துள்ளனர். லலித் அத்துலத்முதலியும், காமினியும் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள போதும், பத்திரிகைகள் வேண்டுமென்றே குற்றம் சாட்டியிருப்பினும் பிரேமதாசா அரசாங்கத்தினருக்கும் அதிருப்தியாளருக்கும் மேற்குலகம், இந்தியா தொடர்பாக பெரும் முரண்பாடு உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. இதனால், அந்நிய சக்திகளின் தலையீடுகள், குறைந்தது மறைமுக அங்கீகாரம் கூட இல்லை என்று எவரும் அடித்துக் கூறிவிட முடியாது.

1987ஆம் ஆண்டு இந்திய-சிறிலங்கா சமாதான ஒப்பந்தத்தின் போது தம்மை ஓரளவு தெளிவாக வெளிக்காட்டிக் கொண்டவர் காமினி திஸ்ஸநாயக்கா. அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கு அடுத்தபடியாக ஒப்பந்தத்திற்கு தீவிர ஆதரவு வழங்கியவர் அவர். அதே போன்று கடந்த காலம் ஐக்கிய தேசியக் கட்சி கடைப்பிடித்து வந்த மேற்குலகம் சார்ந்த வெளியுறவுக் கொள்கையிலும் பற்றுக் கொண்டவர்.

அதேபோன்றே முன்னாள் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் இலங்கையில் ஏற்பட்ட தேசிய இனப் போராட்டத்திற்கு மேற்குலகிடம் இருந்தே பெரும் உதவிகளையும் ஆலோசனைகளையும் பெற்றவர். இவரது காலத்தில் பிரிட்டன் சிறிலங்கா உறவு மிக நெருக்கமாகவே இருந்தது. இவர்களது நெருக்கம் காரணமாகவே பிரித்தானிய கூலிப்படையான எஸ். ஏ. எஸ்ஸும், அத்தோடு மொஸாட்டும் சிறிலங்காவிற்குள் புக வாய்ப்புக்கள் ஏற்பட்டன.

மறுவளமாக சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா 1987ஆம் ஆண்டு இந்திய-சிறிலங்கா சமாதான ஒப்பந்தத்தை வன்மையாக எதிர்த்தவர். ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்ச்சியைப் புறக்கணிப்புச் செய்தவர். இதன் மூலம் இந்தியாவிற்கு வேண்டத்தகாதவர் பட்டியலில் உள்ளவர்.

மேற்கு நாடுகளைப் பொறுத்தும் சிறிலங்காவின் தற்போதைய ஜனாதிபதி பெரியளவில் நல்லுறவைப் பேணி வந்தார் என்று சொல்வதற்கில்லை. இனப் பிரச்சினை தொடர்பாகவும் ஏனைய விவகாரங்கள் தொடர்பாகவும் மேற்குலகத்தின் கருத்துக்களை அவர் கருத்திற் கொள்ளவில்லை. மாறாக சில விவகாரங்களில் எதிர் நடவடிக்கைகளும் மேற்கொண்டார். இதற்கு பிரிட்டிஷ் தூதுவர் கிளஸ்ரோன் விவகாரத்தில் அவர் நடந்து கொண்டதைக் கூறலாம்.

அத்தோடு கிழக்கு ஆசிய நாடுகளுடன் உறவைப் பலப்படுத்திக் கொள்ளக் கூடிய புதிய வெளியுறவுக் கொள்கையை வகுப்பதில் அக்கறைகாட்டினார். மேற்குலகத்தைப் பொறுத்து இதுவும் சர்ச்சைக்குரிய ஒன்றே ஆகும். அதிலும் சீனாவுடனான உறவு அவர்களுக்கு உவப்பளிப்பதாக இல்லை. கட்டுப்பாடற்ற ரீதியில் மூன்றாம் உலக நாடுகளுக்கு சீனா மேற்கொள்ளும் ஆயுத விநியோகத்தினால் மேற்குலகம் தனது நலன்கள் பாதிக்கப்படலாம் எனக் கருதுகின்றது.

இவ்வாறான நிலைகள் இந்தியாவும், பிரிட்டன் உள்ளிட்ட மேற்குலகமும், சிறிலங்கா ஜனாதிபதிக்கு எதிரான நடவடிக்கைக்கு ஊக்கம் அளித்திருக்கலாம் என கணக்குப் போடத் தூண்டியிருக்கலாம். ஆனால் தற்பொழுது இக்கணக்கில் சிறு தவறுகள் இருக்கலாம். அல்லது மிகைப்படுத்தப்பட்டிருக்கலாம். ஆனால் சிறிலங்காவில் ஒரு ஆட்சிக் கவிழ்ப்பு இடம் பெறுமாயின் இந்தியாவும், பிரிட்டனும் அதனை வெளிப்படையாக இல்லாவிடினும். மனதார வரவேற்கும் என்பதில் மட்டும் சந்தேகமில்லை.

நெருக்கமான உறவுகளை அதிகரிப்பது அவசியம் என்பதை உணர்ந்திருப்பது தமக்கு உற்சாகம் அளிக்கிறது என்றும் ஜோன் மேயர் கூறியுள்ளார்.

திகதியுடன் மூடப்பட்டதைத் தொடர்ந்து வாட்டுகளில் அனுமதிக்கப்பட்டிருந்த பல நோயாளர்கள் அவர்களது வீடுகளுக்குச் செல்லுவதற்கு

# மொஸ்கோவிலிருந்துமேயர் சீனா சென்றுள்ளார்

(பீக்கிங்)

மத்திய கிழக்கு உட்பட மோதல்களில் இறங்கி உள்ள கீழைத்தேய நாடுகளுக்கு சீனா ஆயுதங்களை விற்பனை செய்வது குறித்தும் மற்றும் பல விடயங்கள் குறித்தும் பேச்சுவார்த்தை செய்வதற்கு பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேயர் பீக்கிங்கிற்குச் சென்றுள்ளார்.

மொஸ்கோவிற்கு சென்றுவிட்டு அங்கிருந்து விமானம் ஊடாக நேற்று முன்தினம் பீக்கிங்கிற்கு வந்திறங்கிய ஜோன் மேயர் சீனாவின் பிரதம மந்திரி லீ பெங் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஜியாவ் பிளெமிங் ஆகியோருடனும் சீன ஜனாதிபதி யாங்சகுங் ஆகிய அவைவருடனும் கலந்துரையாடுவார் என்று ஜோன் மேயருடன் சீனாவுக்குச்சென்ற அதிகாரிகள் பத்திரிகையாளரிடம் கூறியுள்ளனர்.

இதுதவிர பிரதமர் மேயர் தாம் தமது கருத்துவெளியீட்டில் சர்வதேச நாடுகளிலிருந்து சீனா தனித்து இருக்கும் நிலைமையை முற்றுப் புள்ளி வைத்து அனைத்து நாடுகளுடனும் வர்த்தக பொருளாதார தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளும் காலம் வந்துவிட்டது என்று கூறினார்.

அத்துடன் கடினப் போக்குடைய கம்யூனிஸ்ட் தலைவர்களுடனும் மனித உரிமைகள் குறித்து பேசப் போவதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை ஜோன் மேயரின் அதிகாரிகள் சிலர் சோவியத் யூனியனில் ஏற்பட்டுள்ள இன்றைய நிலைமை சீனாவில் உள்விவகாரத்தில் அதிக கட்டுப்பாடுகளை விதிப்பதற்கான ஏது நிலைகள் இருப்பதாகவும் கூறி உள்ளனர்.

# அணு ஆயுத ஆற்றல் பாகிஸ்தானிடம் உள்ளது

## -பெனாசிர் பூட்டோ

(இஸ்லாமாபாத்)

அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் ஆற்றல் பாகிஸ்தானிடம் இருக்கின்றது என்று முன்னாள் பிரதம மந்திரியும், எதிர்க்கட்சித் தலைவருமாகிய பெனர்சிர் பூட்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இஸ்லாமாபாத்தில் அயல் நாட்டு செய்தியாளர்கள் மத்தியில் பேசிய பெனாசிர் அணு ஆயுதம் ஒன்றை விரைவில் தயாரிப்பதற்கு வேண்டிய போதுமான அளவு தொழில் அறிவு பாகிஸ்தானிடம் இருக்கிறது என்றும்;

நான் பிரதம மந்திரியாக இருந்தபோது அவை அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட தடையாக இருந்ததாகவும் தெரிவித்தார்.

பிரதமராக இருந்தபோது அணு ஆயுத தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தால் இந்தப் பகுதியில் அணு ஆயுதங்களும், வழக்கமான ஆயுதங்களும் பரவுவதைத் தடுப்பதற்காக நடத்தப்படும் எந்த ஒரு பேச்சுவார்த்தையிலும் பாகிஸ்தானின் நிலைமை பலவீனமாக இருந்திருக்கும் என்றும் திருமதி பெனாசிர் பூட்டோ தெரிவித்தார்.

# அரசியல் நெருக்கடிகள் புதுமையானதொன்றல்ல

## -கணேசலிங்கம்

(கொழும்பு)

இந்தியா, ரஷ்யா போன்ற வளம்மிக்க நாடுகளில் கூட இன்று நாளுக்கு நாள் பாரிய அரசியல் மாற்றங்கள், நெருக்கடிகள் ஏற்பட்டு வருகின்றன. எனவே எமது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற இன்றைய அரசியல் நிலைமைகள் ஒன்றும் பெரிய புதினமல்ல என்று கொழும்புபிரதிமேயர் கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமைகள் புதிதல்ல என்பதால் இதனைக் கண்டு மக்கள் மனம் தளராது நாட்டினை முன்னேற்றப் பாதையில் எடுத்துச் செல்ல முனைய வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

சாலைக்கும் மாற்றப்படவுள்ளனர்.

மேற்படி வைத்தியசாலை மூடப்படும் என்ற செய்தி ஈழநாதத்தில் வெளிவந்தது தெரிந்ததே.

தற்போது மூடப்பட்ட பகுதிகளை வேறு இடத்தில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையில் மேற்படி வைத்தியசாலை வட்டாரங்கள் ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது. நோயாளர் நலன்கருதி வேறு இடத்தில் விரைவில் இயங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது மானிப்பாயில் தொடர்ந்து குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு மனநோயாளர் பிரிவு பல்சிகிச்சைப்பிரிவு ஆகியன இயங்குகின்றன. (ச)

# துப்பாக்கிச் சூடும் ஷெல்தாக்கும்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் கட்டுவன், குப்பிளான், வீமன்காமம், தெல்லிப்பளை ஆகிய பகுதிகளை நோக்கி பரவலான ஷெல்தாக்குதலும் 50கலிபர்த் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணியளவில் காரைநகர் இராணுவ முகாமில் இருந்து பரவலான எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் சேதமெதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

# ஆசிரியர் ஆலோசகர்கள் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன

(நல்லூர்)

யாழ் மாவட்டத்திலுள்ள ஆசிரியர் ஆலோசகர் வெற்றிடங்கள் யாழ் கல்வித்திணைக்களத்தினாலும், கோட்டக் கல்வி அலுவலகங்களினாலும் நிரப்பப்பட்டுள்ளன

மேலும் இவர்கள் மூலம் சேவைக்காலப்பயிற்சி வகுப்புகளும் நடாத்தப்படுகின்றன. ஆனால் இவர்களுக்கான நிரந்தர நியமனக்கடிதங்கள் இதுவரை வட-கிழக்கு மாகாண சபையினால் வழங்கப்படவில்லை

இவர்களுக்கு நிரந்தர நியமனக்கடிதத்தை வழங்கி, பயிற்சி வகுப்புகளை நன்கு நடைபெற உதவுமாறு யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர் வட-கிழக்கு மாகாணசபை கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்

ஆசிரியர் ஆலோசகர்களுக்கு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளரினால் தற்காலிக நியமனக் கடிதங்களே வழங்கப்பட்டுள்ளன.

# புலிகளே கொன்றதாக புலனாய்வுத்துறைமுடிவாம்

(சென்னை)

விடுதலைப்புலிகளே ராஜீவ் காந்தியை கொலை செய்தனர் என்று விசேட புலனாய்வுக் குழு முடிவு செய்துள்ளது என்று 'இந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து வெளியாகும் 'இந்து' பத்திரிகை ''முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவின் கொலையை விசாரித்து வரும் சிறப்புப் புலனாய்வுக் குழுவினர் புலிகளே ராஜீவைக் கொலைசெய்தனர் என்று நிச்சயமான முடிவுக்கு வந்து விட்டனர்'' என்று செய்தி வெளியிட்டுள்ளது.

# பதவி விலகமாட்டேன்; கொர்பசேவ் அறிவிப்பு

(மொஸ்கோ)

சோவியத் யூனியனில் வரலாற்றுச் சிக்கல் ஏற்பட்டுள்ள இந்த நிலையில் நான் பதவி விலகப் போவதில்லை என்று சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் தெரிவித்துள்ளார்

அமெரிக்க, சோவியத் தொலைக்காட்சிகளுக்கு கொர்பசேவ் அளித்த பேட்டியொன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தாம் பதவி விலகினால் அது தவறாக அமைந்துவிடும் என்றும், பதினைந்து குடியரசுகளில் பதினொரு குடியரசுகள் யூனியனை பேணிக்காக்க இணங்கியுள்ளன என்றும், சுதந்திரப் பிரகடனம் செய்துள்ளவை உட்பட எல்லாக் குடியரசுகளுமே பொருளாதார ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளஉடன்பட்டுள்ளன என்றும் கொர்பசேவ் தெரிவித்தார்.

# துப்பாக்கிப் பிரயோகம்

வவுனியா நகருக்குச் சென்ற பொதுமக்கள் மீது நேற்று முன்தினம் காலை காவலரணில் நின்ற சிறிலங்கா இராணுவத்தினரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரியவருகின்றது.

## சீனாவை அமெரிக்கா மிரட்டுகிறது

(வாஷிங்டன்)

தியனென்மன் சதுக்கத்தில் நடந்த மாணவர் போராட்டத்தின் பின் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருப்போரைச் சீன அரசு விடுதலைசெய்யாவிடின் அமெரிக்கா சீனாவிற்கு வழங்கியிருக்கும் அதிகம் விரும்பத்தக்க நாடு என்னும் அந்தஸ்தைத் திரும்பப் பெறக்கோரி போராடவேண்டிவரும் என்று அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் எச்சரித்துள்ளனர்.


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், விவசாயபீடம், கிளிநொச்சி.**

பின்வரும் பதவிகளுக்கு 1991-09-27 ஆம் திகதி வரை பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்படும்.

1. தற்காலிக ஆங்கிலப் போதனாசிரியர்
2. தற்காலிக உதவி விரிவுரையாளர் / தற்காலிக செய்முறை காட்டுநர் பயிராக்கவியல்/ விவசாய இரசாயனவியல் விவசாயப் பொருளியல்/விவசாய உயிரியல்/மிருக விஞ்ஞானம் / விவசாயப் பொறியியல்.
3. தற்காலிக உதவி விரிவுரையாளர்/ கணிதம்

**சம்பள அளவுத்திட்டம்**

1. தற்காலிக ஆங்கிலப் போதனாசிரியர்: 3,000/- ரூபா (நிலையானது) மாதமொன்றுக்கு.
2. தற்காலிக உதவி விரிவுரையாளர்: 3,900/- ரூபா (நிலையானது) மாதமொன்றுக்கு.
3. தற்காலிகசெய்முறை காட்டுநர்: 3,250/- ரூபா (நிலையானது) மாதமொன்றுக்கு

விண்ணப்பங்கள் இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்(தாபனங்கள்) அலு


# 1974 கச்சதீவு ஒப்பந்தத்தை மீள் பரிசீலனை செய்யவும்

### அ. தி. மு. கவும், காங்கிரசும் கோரிக்கை

(சென்னை)

இந்திய மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் துன்புறுத்தப் படுவதைத் தடுக்க ராமேஸ்வரம் கடற்கரைப் பகுதியில் இந்தியகடற்படையைப் பலப்படுத்தவேண்டும் என்று ராஜ்ய சபையில் தமிழக உறுப்பினர்கள் கட்சி பேதமின்றி வலியுறுத்தினார்கள்.

கச்சதீவை சிறிலங்காவிற்கு அளிக்க வகை செய்யும் 1974-ஆம் இந்திய - சிறிலங்கா ஒப்பந்தத்தை மீள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அ. இ. அ. திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்கள் வி. சாமிநாதன், எஸ்.வின்சென்ற், இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் ஜெயந்தி நடராசன், வி.நாராயணசாமி ஆகியோர்கள் கோரினார்கள்.

அ. இ. அ. திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் வி. சாமிநாதன் இந்தப் பிரச்சினையை சபையில் எழுப்பினார்.

1974 ஆம் ஆண்டு செய்யப்பட்ட ஒப்பந்தத்தை ரத்துச் செய்து கச்சதீவை மீண்டும் இந்தியா பெறவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் அடிக்கடி கண்மூடித் தனமான தாக்குதலை நடத்தி வருகிறார்கள் என்றும், கடந்த ஆகஸ்ட் மாதம் 31-ஆம் திகதி நடந்த இத்தகைய தாக்குதலில் பல மீனவர்கள் காயப்பட்டதாகவும் அவர் கூறினார்

கடந்த சில ஆண்டுகளில் சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலில் மூன்று இந்திய மீனவர்கள் உயிரிழந்திருப்பதாக வின்சென்ற் குறிப்பிட்டார். இந்தப் பிரச்சினைகுறித்து சிறிலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி ராமேஸ்வரம் மீனவர்கள் தங்கு தடையின்றி மீன்பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சாமிநாதன் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டார்.

சிறிலங்கா கடற்படையினர் துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் உதவ நஷ்ட ஈடு கோரவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பெங்களூரில் தகனம்

(பெங்களூர்)

ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக கருதப்பட்ட சிவராசன் சுபாவின் சடலங்கள் நேற்று பெங்களூரில் தகனம் செய்யப்பட்டன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கொலை வழக்கை விசாரணை செய்து வரும் சிறப்புப் புலனாய்வுக் குழுவின் அனுமதியுடன்தான் இத் தகனம் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இவர்களது உடல்கள் சந்தேகத்துக்கு இடமின்றி அடையாளம் காணப்பட்டுள்ளதாலேயே தகனம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## விரைவில் கொள்வனவு செய்து விநியோகிக்கவும்

(யாழ்ப்பாணம்)

உணவு முத்திரைக்கு வழங்குவதற்குத் தேவையான பொருள்கள் போதியளவு களஞ்சியத்தில் இருப்பதனால் அவற்றை மிகக்கூடிய விரைவில் கொள்வனவு செய்து பொதுமக்களுக்கு விநியோகிக்குமாறு சகல ப. நோ. கூ. சங்கங்களையும் சமூக சேவைகள் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

செப்ரெம்பர் மாத உணவு முத்திரைகளுக்கு அரிசி, மா, சீனி, பருப்பு, பால்மா ஆகியன வழங்கப்படவுள்ளன.

தமிழ்

சில் வைக்கப்பட்டதாகவும்' இதில் கலந்துகொள்ள வந்த 50 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

தலைவர்

யவந்துள்ளதாக் பிரபாகரன் மீது கொலைக் குற்றச்சாட்டு பிறப்பிப்பதற்கும் பிடிவிறாந்து பிறப்பிப்பதற்கும் மத்திய அரசு முடிவு செய்துள்ளதாகவும் செய்தி வெளியிட்டுள்ளது

முத்திரைகள் ஒட்டப்பட்ட

கருதி குறிப்பிட்ட திகதியில்சான்றிதழை வழங்குமாறு மாவட்டப் பதிவாளரால் வழங்கப்பட்ட பணிப்புரை

அத்தியாவசிய

அதிகாரமளிக்கப்பட்ட கடைகளிலும் நுகர்வோர் மேற்படி விலைகளில் பண்டங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உலர் உணவுகள் வழங்கப்படும்.

இதேவேளை உணவு முத்திரை வைத்திருப்பவர்களுக்கு இலவச உணவு விநியோகம் தொடர்ந்தும் வழங்கப்படவுள்ளது.

நிராகரிக்க

உட்பட நாற்றுப்பதின்ாறு உறுப்பினர்களும் நேரில் சமூகமளித்துஇந்தவேண்டுகோளை

## போல்டிக் சுதந்திரத்தை பிரிட்டன் அங்கீகாரம்

(லண்டன்)

போல்டிக் குடியரசுகளின் சுதந்திரத்தையும் அங்கீகரிப்பதற்கான முயற்சிகளில் பிரித்தானியா ஈடுபட்டுள்ளது.

ராஜீயத் துறையிலான உறவுகள் பற்றி விவாதிப்பதற்காக பிரித்தானிய அமைச்சர் ஒருவர் போல்டிக் குடியரசுகளுக்கும் செல்லுவார் எனத் தெரிவிக்கப்படுகிறன.

புதிய அரசாங்க மற்றும் வங்கி வசதி முறைகளை அமைப்பதில் துணை புரியுமாறும் சிவில் ஊழியர்களுக்கும் ராஜீயத் துறையிலான பிரதிநிதிகளுக்கும் பயிற்சி அளித்திடுமாறு போல்டிக் அரசுகள் பிரித்தானியாவிடம் வேண்டுகோள்விடுத்திருந்தன.

முன்னதாக அமெரிக்காவும் போல்டிக் அரசுகளுடன் ராஜீயத்துறை உறவுகளை தொடர முன்வந்தமை தெரிந்ததே.

## லீபெங்- ஜோன் மேயர் ஒப்பந்தத்தில் கைச்சாத்து

(பீகிங்)

சீனாவிற்கு சென்றிருக்கும் பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயரும்,சீனப்பிரதமர்லீபெங்கும் நேற்று ஒப்பந்த மொன்றில் கையொப்பமிட்டுள்ளனர் இவ்வொப்பந்தப்படி ஹொங் ஹொங்கில் நாற்பது கோடி டாலர் செலவில் பிரிட்டன் விமானத்தளமொன்றை நிறுவும் அத்துடன் 1997-ம் ஆண்டில் ஹொங்ஹொங்கை பிரிட்டன் அரசு சீனாவிடம் ஒப்படைக்கும்.

இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்பு இரு பிரதமர்களும் இரண்டு மணி நேரம் பேச்சு நடத்தினர்.

## தொழில் இழந்தோருக்கு உணவு முத்திரை

(யாழ்ப்பாணம்)

தற்போதைய சூழ்நிலைகளால் தமது தொழிலை இழந்து வருமானம் குறைந்த நிலையில் உள்ளவர்களுக்கு புதிதாக உணவு முத்திரைகளை வழங்குவதற்கு யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த காலங்களில் 700 ரூபாவிற்குமேல் வருமானம் பெற்றவர்கள் தற்போது இதற்குக் குறைந்த வருமானத்தைப் பெற்று வந்தால் அவர்களுக்கே புதிய உணவு முத்திரை வழங்கப்படவுள்ளது. இவர்கள் எழுநூறு ரூபாவிற்குக் குறைந்த வருமானத்தைப் பெற்றால்உணவு முத்திரை பெறத் தகுதியுடையவர்களாகக் கருதப்படுவர் என இதற்குப் பொறுப்பான அதிகாரி தெரிவித்தார். (ச)

## உணவு முத்திரைகளுக்கு பொருள்களைப் பெறலாம்

உணவு முத்திரைகள் வைத்திருப்போர் அதற்கான பொருள்களை உடனடியாகத் தத்தமது பல நோ கூ. சங்கங்களில் பெற்றுக் கொள்ளலாம் என சமூக சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

கடந்த பல மாதங்களாக உலர் உணவு விநியோகத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உணவு முத்திரைகளுக்கு பொருள்கள் வழங்கும் திட்டம் உலர் உணவு விநியோக நிறுத்தத்தைத் தொடர்ந்து மீண்டும் நடைமுறைக்குக்கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இம்மாதம் 1-ம் திகதிமுதல் பொது மக்கள் தமது பழைய உணவு முத்திரையைக் கொடுத்து அதன் பத்தாவது புள்ளிக்கு பொருள்களை பெற்றுக்கொள்ளலாம்.

இதேவேளை உலர் உணவு அட்டை 'அ' வைத்திருப்போருக்கு மட்டுமே உணவு முத்திரைக்கு பொருள்கள் வழங்கப்படும் எனவும் 'இ' அட்டை வைத்திருப்போர் இதனைப் பெற தகுதி அற்றவர்கள் எனவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## பிரேமாவிற்கு எதிரானவர்

## உருவப்படங்கள் திரை நீக்கம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பொது அறையில் மறைந்த பேராசிரியர் எஸ். சந்தையா (முன்னாள் பீடாதிபதி விவசாய பீடம்), மறைந்த விரிவுரையாளர் கே. ரஞ்சகுமார் (அரசறிவியல்துறை) ஆகியோரது உருவப்படங்கள் திரை நீக்கம் செய்யப்படவுள்ளன.

கலாநிதி சி.க. சிற்றம்பலம் தலைமையில் இன்று காலை பத்துமணியளவில் இந்நிகழ்ச்சி இடம்பெறும்.

மறைந்தபேராசிரியர் எஸ். கந்தையா அவர்களின் உருவப்படத்தைத் துணைவேந்தர் அ. துரைராசா அவர்களும், மறைந்த ரஞ்சகுமார் அவர்களின் உருவப்படத்தைக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களும் திரை நீக்கம் செய்யவுள்ளனர்

தற்பொழுது

சுமந்தும் விவகாரம் தொடர்பாக பேசுகையில் தான் செய்த தவறுகள் என்ன என்று வினாவினார் 1987ஆம், 1989ஆம் 1991ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் தமது கட்சிக்கு அதிகரித்த எண்ணிக்கையில் வாக்குகள் கிடைத்தன என்றும், சாதாரண மக்கள் தம் வசமே உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னைய ஜனாதிபதியின் ஆட்சிக்காலத்தின் போது ஜனாதிபதி ஆட்சி முறையை ஆதரித்தவர்கள் இப்பொழுது அதனைக் கண்டிக்கிறார்கள் என்றும் பிரேமதாசா தெரிவித்தார்.

## பல்கலைக்கழகம், விவசாயப்பீடம், கிளிநொச்சி.

பின்வரும் பதவிகளுக்கு 1991-09-27 ஆம் திகதி வரை பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

1. தற்காலிக ஆங்கிலப் போதனாசிரியர்
2. தற்காலிக உதவி விரிவுரையாளர் / தற்காலிக செய்முறை காட்டுநர் பயிராக்கவியல்/ விவசாய இரசாயனவியல் விவசாயப் பொருளியல்/விவசாய உயிரியல்/மிருக விஞ்ஞானம் / விவசாயப் பொறியியல்.
3. தற்காலிக உதவி விரிவுரையாளர்/ கணிதம்

**சம்பள அளவுத்திட்டம்**

1. தற்காலிக ஆங்கிலப் போதனாசிரியர்: 3,000/- ரூபா (நிலையானது) மாதமொன்றுக்கு.
2. தற்காலிக உதவி விரிவுரையாளர்: 3,900/- ரூபா (நிலையானது) மாதமொன்றுக்கு.
3. தற்காலிக செய்முறை காட்டுநர்: 3,250/- ரூபா (நிலையானது) மாதமொன்றுக்கு

விண்ணப்பங்கள் இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்(தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும்

விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் 23x10 ச. மீட்டர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட கடித உறை அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
1991-09-02
(B/3056)

அ. இ. அ. திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் வி. சாமிநாதன் இந்தப் பிரச்சினையை சபையில் எழுப்பினார்.

1974 ஆம் ஆண்டு செய்யப்பட்ட ஒப்பந்தத்தை ரத்துச் செய்து கச்சதீவை மீண்டும் இந்தியா பெறவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பெங்களூரில் தகனம் செய்யப்பட்டன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கொலை வழக்கை விசாரணை செய்து வரும் சிறப்புப் புலனாய்வுக் குழுவின் அனுமதியுடன்தான் இத் தகனம் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

# விரைவில் கொள்வனவு செய்து விநியோகிக்கவும்

(யாழ்ப்பாணம்)

உணவு முத்திரைக்கு வழங்குவதற்குத் தேவையான பொருள்கள் போதியளவு களஞ்சியத்தில் இருப்பதனால் அவற்றை மிகக்கூடிய விரைவில் கொள்வனவு செய்து பொதுமக்களுக்கு விநியோகிக்குமாறு சகல ப. நோ. கூ. சங்கங்களையும் சமூக சேவைகள் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

செப்ரெம்பர் மாத உணவு முத்திரைகளுக்கு அரிசி, மா, சீனி, பருப்பு, பால்மா ஆகியன வழங்கப்படவுள்ளன.

**தமிழ்**

சீல் வைக்கப்பட்டதாகவும்' இதில் கலந்துகொள்ள வந்த 50 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

**தலைவர்**

யவந்துள்ளதால் பிரபாகரன் மீது கொலைக் குற்றச்சாட்டு பிறப்பிப்பதற்கும் பிடிவிறாந்து பிறப்பிப்பதற்கும் மத்திய அரசு முடிவு செய்துள்ளதாகவும் செய்தி வெளியிட்டுள்ளது

**முத்திரைகள் ஒட்டப்பட்ட**

கருதி குறிப்பிட்ட திகதியில்சான்றிதழை வழங்குமாறு மாவட்டப் பதிவாளரால் வழங்கப்பட்ட பணிப்புரை அடங்கிய விண்ணப்பப் படிவங்களும் மேலதிகப் பதிவாளரின் காரியாலயத்தில் காணாமற் போய்விடுகின்றன.

இதற்காகக் காரியாலயத் தேவைக்கு மாத்திரம் பாவிக்கப்படும் எழுது வினைஞர் சோதனை ஏடுகளிலும் மாவட்டப் பதிவாளரின் அறிவுறுத்தலுடன் வரும் சில விண்ணப்பங்களும், விண்ணப்பங்களின் தகர்வும் பதிவு செய்யப்படாமல் எப்படியோ தப்பிவிடுகின்றன. இன்றுபோய் நாளை வா என்று விண்ணப்பதாரர்களுக்குச் சொல்லப்படுகிறது.

தூர இடங்களிலும், தீவுப் பகுதிகளிலும் இருந்து பல கஷ்டங்கள் மத்தியிலும் நம்பிக்கையுடன் வரும் பலர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பவேண்டியுள்ளது. இதனால் பாதிப்புற்றோர்பலர் புனர்வாழ்வுப்பகுதியில் தமக்குரிய நன்மைகளைப் பெற முடியாது உள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**அத்தியாவசிய**

அதிகாரமளிக்கப்பட்ட கடைகளிலும் நுகர்வோர் மேற்படி விலைகளில் பண்டங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உலர் உணவுகள் வழங்கப்படும்.

இதேவேளை உணவு முத்திரை வைத்திருப்பவர்களுக்கு இலவச உணவு விநியோகம் தொடர்ந்தும் வழங்கப்படவுள்ளது.

**நிராகரிக்க**

உட்பட நூற்றுப்பதினாறு உறுப்பினர்களும் தேரில் சமுகமளித்துஇந்தவேண்டுகோளை விடுத்துள்ளதை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி பிரேமதாசா மீது திட்டவட்டமான ஆதரவைத் தெரிவித்திருக்கும் இந்த உறுப்பினர்கள் ஜனாதிபதி பிரேமதாசா சட்டவிரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை எனவும், அரசியலமைப்பை மீறவில்லைஎனவும் கூறியுள்ளனர்.

அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க பேசுகையில், பிரேமதாசாவிற்கு எதிராக 46 ஐ. தே. கட்சி உறுப்பினர்கள் குற்றச் சாட்டில் கையெழுத்திட்டுள்ளனர் எனக் கூறும் எதிர்க்கட்சிகள் தங்களின் எண்ணிக்கையை நிரூபிக்கட்டும், அவர்களால் அது முடியாத காரியம் எனக் குறிப்பிட்டார். அத்துடன் நேற்றைய கூட்டத்திற்கு வருகை தராத ஐ. தே. கட்சி உறுப்பினர்கள் பற்றிக் குறிப்பிடுகையில் அதிபருடன் சமரசம் செய்து கொள்ள இன்னமும் சந்தர்ப்பம் உண்டு என்றார் அவர்.

தெரிவிக்கப்படுகிறது

வும் அத்துடன் 1997-ம் ஆண்

# தொழில் இழந்தோருக்கு உணவு முத்திரை

(யாழ்ப்பாணம்)

தற்போதைய சூழ்நிலைகளால் தமது தொழிலை இழந்து வருமானம் குறைந்த நிலையில் உள்ளவர்களுக்கு புதிதாக உணவு முத்திரைகளை வழங்குவதற்கு யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த காலங்களில் 700 ரூபாவிற்குமேல் வருமானம் பெற்றவர்கள் தற்போது இதற்குக் குறைந்த வருமானத்தைப் பெற்று வந்தால் அவர்களுக்கே புதிய உணவு முத்திரை வழங்கப்படவுள்ளது. இவர்கள் எழுநூறு ரூபாவிற்குக் குறைந்த வருமானத்தைப் பெற்றால்உணவு முத்திரை பெறத் தகுதியுடையவர்களாகக் கருதப்படுவர் என இதற்குப் பொறுப்பான அதிகாரி தெரிவித்தார். (ச)

# உணவு முத்திரைகளுக்கு பொருள்களைப் பெறலாம்

உணவு முத்திரைகள் வைத்திருப்போர் அதற்கான பொருள்களை உடனடியாகத் தத்தமது பல நோ கூ. சங்கங்களில் பெற்றுக் கொள்ளலாம் என சமூக சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

கடந்த பல மாதங்களாக உலர் உணவு விநியோகத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உணவ முத்திரைகளுக்கு பொருள்கள் வழங்கும் திட்டம் உலர் உணவு விநியோக நிறுத்தத்தைத் தொடர்ந்து மீண்டும் நடைமுறைக்குக்கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இம்மாதம் 1-ம் திகதிமுதல் பொது மக்கள் தமது பழைய உணவு முத்திரையைக் கொடுத்து அதன் பத்தாவது புள்ளிக்கு பொருள்கள் பெற்றுக்கொள்ளலாம்.

இதேவேளை உலர் உணவு அட்டை 'அ' வைத்திருப்போருக்கு மட்டுமே உணவு முத்திரைக்கு பொருள்கள் வழங்கப்படும் எனவும் 'இ' அட்டை வைத்திருப்போர் இதனைப் பெற தகுதி அற்றவர்கள் எனவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# பிரேமாவிற்கு எதிரானவர் படுகொலை செய்யப்படுவர்

சிறிலங்காவின் ஜனாதிபதி பிரேமதாசாவைப் பதவி நீக்கம் செய்யக் கோருவோரை படுகொலை செய்வோம் என்பது போன்ற வாசகங்களைக் கொண்ட சுவரொட்டிகள் கொழும்பில் பல பாகங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன.

ஆனால் இச் சுவரொட்டிகளை பிரேமதாசாவிற்கும், அவரது அரசுக்கும் களங்கம் கற்பிக்க முயலும் சக்திகளே ஒட்டியிருப்பதாக அரசுக்குச் சொந்தமான டெய்லி நியூஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

**அதிருப்தியாளர்**

இதனை வரவேற்ற லலித் அத்துலத் முதலியும் மிகவிரைவில் உடனடியாக கருத்துக் கணிப்பு நடத்தப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

**பிரிட்டனின்**

ஒருவரை நியமிக்காதது சிறிலங்கா வெளியுறவு அமைச்சு வட்டாரங்களில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாம்.

சிறிலங்காவுக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுகிறார் என்ற குற்றத்தின் பேரில் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டார் என்பது தெரிந்ததே.

## டீசல் திருட்டு

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க அம்புலன்ஸ் வாகனத்தில் டீசல் திருடிய அதன் சாரதி விடுதலைப்புலிகளிடம் பிடிபட்டார்.

ஊரெழு செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் இருந்து பத்து லீற்றர் டீசலைத்திருடிக் கொண்டு செல்லும் போது லோகேஸ்வரன், இராமகிருஷ்ணன் ஆகிய இருவரும் புலிகளிடம் பிடிபட்டனர்.

கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்றஇச்சம்பவத்தைத் தொடர்ந்து இவர்கள் இருவரும் புலிகளின் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். (ச)

## திரை நீக்கம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட பொது அறையில் மறைந்த பேராசிரியர் எஸ். சந்தையா (முன்னாள் பீடாதிபதி விவசாய பீடம்), மறைந்த விரிவுரையாளர் கே. ரஞ்சகுமார் (அரசறிவியல்துறை) ஆகியோரது உருவப்படங்கள் திரை நீக்கம் செய்யப்படவுள்ளன.

கலாநிதி சி. க. சிற்றம்பலம் தலைமையில் இன்று காலை பத்துமணியளவில் இந்நிகழ்ச்சி இடம்பெறும்.

மறைந்த பேராசிரியர் எஸ். கந்தையா அவர்களின் உருவப் படத்தைத் துணைவேந்தர் அ. துரைராசா அவர்களும், மறைந்த ரஞ்சகுமார் அவர்களின் உருவப்படத்தை கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களும் திரை நீக்கம் செய்யவுள்ளனர்

**தற்பொழுது**

சுமந்தும் விவகாரம் தொடர்பாக பேசுகையில் தான் செய்த தவறுகள் என்ன என்று வினாவினார் 1987ஆம், 1989ஆம் 1991ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் தமது கட்சிக்கு அதிகரித்த எண்ணிக்கையில் வாக்குகள் கிடைத்தன என்றும், சாதாரண மக்கள் தம் வசமே உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னைய ஜனாதிபதியின் ஆட்சிக்காலத்தின் போது ஜனாதிபதி ஆட்சி முறையை ஆதரித்தவர்கள் இப்பொழுது அதனைக் கண்டிக்கிறார்கள் என்றும் பிரேமதாசா தெரிவித்தார்.

இப்பொழுது நிலவுவது வர்க்க பேதமே தவிர கட்சி வேறுபாடு அல்ல என்றும், யாருக்கும் இந் நாட்டில் உயர் பதவியை வகிப்பதற்கு தாம் திறந்து விட்ட வழியில் அதிருப்தியாளர்களின் இத்தகைய நடவடிக்கை மூடச் செய்து விடும் என்பதை யாரும் மறந்து விட வேண்டாம் என்றும்,

தமது பணியை தொடர்ந்து மேற்கொள்ள முடிந்தால் கொயிகம வகுப்பினர்க்கு என்றுமே வாய்ப்பு கிடைக்காமல் போய்விடும் என்று பிரேமதாசா தமது உரையில் குறிப்பிட்டார்.

என்னைப் போல் எவரும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பாதிப்புக்குள்ளாகவில்லை என்றும்,

தற்போதைய நிலைக்கு பின் கதவின் மூலம் அதிகாரத்தை கைப்பற்ற எடுக்கப்படும் ஒரு முயற்சியே காரணம் என்றும் அரசாங்க116பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு பூரண ஆதரவை தெரிவிக்கும் தீர்மானமொன்றை கைச்சாத்திட்டுள்ளார்கள்என்றும் அவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.